**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர், தேதி: 26.06.2023
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் அமைந்துள்ள வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் பி.டெக் (வேளாண் பொறியியல், ஆற்றல் மற்றும் சுற்று சூழல் பொறியியல், உணவு தொழில்நுட்பம்) மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு தேசிய வேளாண்மை உயர்கல்வி திட்டத்தின் கீழ் உள்ள நிறுவன வளர்ச்சித் திட்டத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் 19.06.2023 முதல் 23.06.2023 வரை நடைபெற்றது. இப்பயிற்சிகள் மாணவர்களுக்கு தொழில்நுட்ப அறிவை வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பி.டெக் (வேளாண் பொறியியல்) பயிலும் மாணவர்களுக்கு வேளாண்மையில் ரோபோடிக்ஸின் பயன்பாடு குறித்த செயல்முறை பயிற்சி ஐ-ரோபோசகரா பயிற்சி நிறுவன வல்லுநர்களால் வழங்கப்பட்டது. பி.டெக் (உணவு தொழில்நுட்பம்) மாணவர்களுக்கு உணவு பாதுகாப்பு மேலாண்மை அமைப்பில் பேரிடர் பகுப்பாய்வுடன் உய்யக் கட்டுப்பாடு மையம் குறித்த பயிற்சி பாராடிஜிம் செர்விசஸ் எனும் தனியார் நிறுவனத்தின் வல்லுநர்களால் வழங்கப்பட்டது மற்றும் பி.டெக் (ஆற்றல் மற்றும் சுற்று சூழல் பொறியியல்) மாணவர்களுக்கு தொழில்துறை ஆற்றல் தணிக்கை குறித்த செயல்முறை பயிற்சி தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சி சங்கத்தின் வல்லுநர்களால் வழங்கப்பட்டது. மேலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இப்பயிற்சிகள் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் மாணவர்களை சந்தித்து பயிற்சியின் பாடத்திட்டத்தையும், செயல்முறை விளக்கங்களையும் குறித்து கலந்துரையாடி மாணவர்களுக்கு ஊக்கமளித்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**